International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தேர் நாவலில் மூடநம்பிக்கை மற்றும் சடங்குகள்

**சு. அன்பு கங்கேஸ்வரன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் க. பூபதி**
உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை
அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்

**ஆய்வுச் சுருக்கம்**

இன்று சமூகத்தில் செல்வந்தர், ஏழை, நடுத்தர வர்க்கத்தினர் என எவராயினும் அவரிடையே இறை நம்பிக்கை இருந்து வருகிறது. ஆனால் அதன் போக்கு சரியான முறையில் உள்ளதா? என்றால் இல்லை என்றே கூற வேண்டும். வழிபாட்டு முறைகள் சடங்குகள் என்ற பெயரில் நாம் பின்பற்றி வரும் மூடநம்பிக்கைகள் யாவும் காலங்காலமாக தொடர்ந்து வரும் மரபாகவே மாறியுள்ளது. உலகம் முழுவதிலும் மூடநம்பிக்கை சார்ந்த செயல்கள் இன்றளவும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. இந்த இறை மற்றும் மூடநம்பிக்கை சார்ந்த சடங்குகளை ஒரு கருவியாகக் கொண்டு வலியோர் செய்யும் ஆதிக்கத்தையும், எளியோரின் இயலாமையையும் கன்னட எழுத்தாளரான 'ராகவேந்திர பாட்டில்' தனது 'தேரு' நாவலில் விளக்கிக் காட்டுகிறார். அதனை மொழிபெயர்ப்பாளர் 'பாவண்ணன்' தமிழ்ப்படுத்தி 'தேர்' எனும் நாவலாக தந்துள்ளார். அந்நாவலை மையமாகக் கொண்டு வலிமை குன்றிய மக்கள் சந்திக்கும் சமூக பிரச்சனைகளையும் அவர்கள் பின்பற்றி வரும் மூடநம்பிக்கை மற்றும் சடங்குகளைப் பற்றியும் ஆராய்வதாக இவ்வாய்வு கட்டுரை அமைகிறது.

**முதன்மைச் சொற்கள்:** தேர், பாவண்ணன், இறை வழிபாடு, சடங்குகள், மூடநம்பிக்கைகள், விழிப்புணர்வு

**முன்னுரை**

மனித இனம் ஒரு பண்பட்ட இனமாகும். இந்த 21ஆம் நூற்றாண்டில் அறிவிலும், அறிவியலிலும் வளர்ச்சி கண்டு பல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வருகிறோம். இருப்பினும் பழங்காலந்தொட்டே வழக்கத்தில் இருந்து வரும் சில மூடப்பழக்கங்களை நாம் இன்றளவும் கடைப்பிடிக்கின்றோம். இது இன்னதென முழுப்பொருள் அறியும் முன்னரே நமக்கு நம் பெற்றோர்களால் இறை மீதான நம்பிக்கை விதைக்கப்படுகிறது. இறையின் பெயரில் அர்த்தமற்ற சடங்குகளும், மூடநம்பிக்கைகளுமே வெகுவாக பின்பற்றப்படுகின்றன. எச்செயலாயினும் அதன் அளவறிந்து செயல்படுதலே சிறப்பாகும். இங்கு நாம் காணவிருக்கும் 'தேர்' நாவலில் பொதிந்துள்ள வழிபாடு, சடங்குகள் மற்றும் மூடநம்பிக்கைகள் பற்றிய செய்திகளை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

**மூடநம்பிக்கையும் இறை நம்பிக்கையும்**

நம்பிக்கை என்பது ஒரு சிந்தனை, ஒரு செயல், ஒரு நபர் மீது நாம் ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு உறுதியான உணர்வாகும். ஒரு செயல் இவ்வாறு நடந்தால் நல்லது, பலன் கிடைக்கும் என நம்மால் உணரப்படும் ஒரு உணர்வே ஆகும். இதனை, **"பகுத்தறிவினால் சோதித்து அறியப்படுவது நம்பிக்கை. சோதித்து அறிய வாய்ப்பிருந்தும் அப்படி செய்யாமலேயே ஒன்றை உண்மை என நினைப்பது மூடநம்பிக்கை"**[1] என அருணன் தனது நூலான 'மூடநம்பிக்கையிலிருந்து விடுதலை'

யில் கூறுகிறார். இந்த மூடநம்பிக்கையானது நீண்ட கால பழக்கவழக்கத்தினாலோ, ஒரு பயத்தினாலோ, இறை சார்ந்த செயல்களினாலோ இன்றும் நம்மிடையே வழக்கத்தில் உள்ளது. இவை நம் அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாகவே கலந்து விட்டன. உதாரணமாக பூனை குறுக்கே வந்தால் நல்லதல்ல, பல்லி சகுனம், சுபகாரியங் களில் விதவைப் பெண்ணை ஈடுபடுத்தாமை போன்ற பலவற்றைக் கூறலாம்.

இறைநம்பிக்கை பக்கம் செல்வோமானால் இறையின் தொடக்கக் காலத்தில், இன்று நாம் வணங்கும் மனித உருவம் போல் கை கால்கள் கொண்ட உருவமாக இல்லை. மனிதர்கள் குழுக்களாக பிரிந்து வாழத் தொடங்கிய காலத்தில் சூரியன், காற்று, மழை போன்ற இயற்கையின் பேராற்றலையே வழிபட்டனர். வளமான வாழ்விற்கு நன்றி கூறவும், அதன் அதீத சக்தியிலிருந்து தன்னை காத்துக் கொள்வதற்குமே இயற்கையை வழிபட்டனர். சடங்கு முறைகள் பெரிதாக இருந்ததில்லை. ‘போலச் செய்தல்’ முறையில் சூரியன், காற்று, மழை போன்ற ஆற்றல்களை கை அசைவுகளின் மூலம் அசைவித்து வணங்கினர். **“மனிதர்கள் தெய்வம் என்பதை ஒரு ஆற்றலாகத் தான் கருதினர்”**[2] என்பதும் அருணனின் கருத்தாகும்.

பின்னர் பிரிவினை, இடப்பெயர்வு மற்றும் புதுப்புது சமூகத் தோன்றல்களினாலும் தெய்வங் களுக்கு தனித்தனி உருவங்கள், பண்புகள் உருவாக்கப்பட்டுவிட்டன. ஊர்ப்புற காவல் தெய்வங்களையெல்லாம் தங்கள் சாதி, மத மாண்புகளுக்கேற்றார் போல் மாற்றிக் கொண்டு புதிய சடங்குகளையும், நம்பிக்கைகளையும் உருவாக்கி தத்தம் அவரவர்க்கென பிரித்துக் கொண்டனர். இதனை, ‘தெய்வங்களும் சமூக மரபுகளும்’ என்ற நூலில், **“ஒரு குறிப்பிட்ட இனக்குழு என்ன வகையான உற்பத்தி முறையை சார்ந்து இருக்கிறதோ அதைப் பொறுத்து தெய்வங்களின் வடிவங்களும் குணங்களும் கதைகளும் அமையும்”**[3] என தொ. பரமசிவன் குறிப்பிடுகிறார்.

இறையும் மூடநம்பிக்கை வளர ஒரு காரணமாகும் மனிதனுக்கு தான் எண்ணியது நிறைவேற வேண்டுமென்ற ஆசை அதிகம். அதற்கு தெய்வத்தை ஒரு மூலமாக நினைத்தான். எண்ணிய செயல் நடக்கத் தவறினால் குறை ஏற்பட்டு விட்டதோ என அஞ்சி தானாகவே சில அர்த்தமற்ற செயல்களான உயிரினங்களை பலியிடுதல், முடிகாணிக்கை, ரத்த காணிக்கை போன்றவற்றைச் செய்தான். காலம் மாற மாற இந்த மூடப்பழக்கங்களும் பெருகிக்கொண்டே தான் வருகின்றன. பல சிறந்த பகுத்தறிவாளர்களின் சொல் கேட்டும் மனந்திருந்தாமல், தம் முன்னோரின் மரபை மீறாதவாறு இறை என்ற பெயரில் மூடநம்பிக்கைகளை அடுத்த தலைமுறைக்கு கடத்தி வருவதையும் காணமுடிகிறது .

### தேரில் இறை வழிபாடு

இந்த ‘தேர்’ நாவலின் கதைக்களம் ‘தரமனட்டி’ எனும் வட்டாரமாகும். இது தற்போதைய கர்நாடகா மாநிலத்தில் அமைந்துள்ளது. வட்டாரத்திற்கு தலைவரான தேசாய், வட்டாரத்தின் நலனில் மிகுந்த அக்கறை உள்ளவர். அதன் நலன் கருதி ‘விட்டலர் சாமி’ கோயிலையும் நிறுவி தேர் திருவிழாவையும் நடத்தி வருவதன் மூலம் மிகுந்த இறை நம்பிக்கை உடையவர் எனத் தெரிகிறது. அங்குள்ள மக்கள் தேரின் பெருமைகளையும் வடிவமைப்பையும் ஒவ்வொரு அடுக்கில் வைக்கப்பட்டிருக்கும் தெய்வச் சிலை களையும் வணங்கி புகழ்கின்றனர்.

**“நாலாவது அடுக்கிலே எருது குதிரைகள்….**

**சிவனே என் மகாதேவா**

**விட்டலர் சாமியின் புகழ் ஓங்குக”**[4]

மேலும், உள்ளூர் மற்றும் வெளியூர் மக்கள் தங்கள் எண்ணம் நிறைவேற இறைவன் பெயரை உச்சரித்து வடக்கயிற்றைப் பிடித்து இழுக்கின்ற னர். இவை ஒவ்வொரு திருவிழாவின் போதும் நடைபெறுவனவே.

ஒரு தேர்த் திருவிழாவின்போது தேர் நகர வில்லை. அதனை நகர்த்த அந்த ஊர்த் தலைவர், அதிகாரி, மக்கள் எடுக்கும் முயற்சியும், அச்சமும் விட்டலர் சாமியின் மீது அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையையும், பக்தியையும் எடுத்துக்காட்டுகிறது.

**“தெய்வத்தின் தேரை இழுத்து சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்ட மக்கள் நான் முன்னால் நீ முன்னால் என்று போட்டி போட்டுக் கொண்டு ஒருவரை ஒருவர் நெருக்கி தள்ளிக் கொள்கிறார்கள்”**[5]

இதன்மூலம் இறைவன் மீதும் இறை செயல்கள் மீதும் ‘தரமனட்டி’ மக்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டிருப்பதை அறிய முடிகிறது.

### தேரில் மூடநம்பிக்கைகள்

மூடநம்பிக்கைகள் என்பவை நம் வாழ்வின் ஒரு அங்கமாகவே மாறிவிட்டன. ‘சோறு சாப்பிட வில்லை எனில் பூச்சாண்டி வருவான்’ என அம்மா சொல்வதை நம்பி பயந்து குழந்தை சாப்பிடும். இப்படி அறியாத வயதில் நம்புவது தவறில்லை. தெளிந்த அறிவும், பருவமும் வந்த பின்னரும் தொடர்ந்து இது போன்றவற்றை நம்புவதும் பின்பற்றுவதுமே தவறாகும்.

‘தேர்’ நாவலில் அதிக அளவில்

மூடநம்பிக்கைகள் மக்களிடையே பரவிக் காணப்படுகின்றன. திருவிழாவில் மக்கள் கூடி தேரை இழுக்கின்றனர். ஆனால் ஒரு அடி கூட தேர் நகரவில்லை. பல முயற்சிகளுக்குப் பிறகும் பலன் ஏதுமில்லை. உடனே மக்களிடையில் 'அபசகுனம்' என்ற பேச்சு தொடங்கியும் இதனால் ஊருக்கு விபரீதம் நடக்கப் போகிறது என்றும் புலம்புகின்றனர். உடனே ஊர் தலைவர் மற்றும் அதிகாரியானவர்கள், சாஸ்திரகார ஐயரை அழைத்து வழி கேட்கின்றனர். **"இந்த அபசகுனத்தை போக்கி நல்ல சகுனமா அமையிறதுக்கு என்ன வழின்னு யோசிச்சு சொல்லு"**[6] என்று அதிகாரி கேட்பதும் ஐயரும் சோழிகளை போட்டு பார்த்ததில் **"நரபலியை தவிர வேறெதுவும் வேண்டாம்"**[7] என்று தெய்வம் நரபலி கேட்பதாக கூறுவதும் தெரிகிறது.

**"மூடநம்பிக்கைகள் மனிதர்களின் மூளைக்கு விலங்கிடுவது மட்டுமல்ல, ஆதிக்கவாதிகளின் அடிக்கட்டுமானமாகவும் அமைகிறது."**[8] என்ற கூற்றை நிரூபிக்கும் வகையில் தரமனட்டி ஊர் தலைவர், அதிகாரி மற்றும் ஐயர் ஆகியோர் தங்கள் உயிரை காத்துக் கொள்ளவும் அதே சமயம் நரபலியை நிறைவேற்றும் நோக்கிலும் கீழ்ச்சாதியினரை பலியிட முடிவெடுத்தனர். **"கீழ்ச்சாதி மனிதன் ஒருவனை பலி கொடுக்க வேண்டும்."**[9] எனவே கீழ் சாதிக்காரனான பொம்மலாட்டக்காரன் 'தேவப்பா' என்பவனைப் பிடித்து நிலம் பொருள் தருவதாகவும், தெய்வத்துக்காக செய்தால் நன்மை என்றும் கூறி அவனின் ஐந்தாவது மகனை தேருக்கு பலியிடுமாறு மூளைச்சலவை செய்து ஒப்புக் கொள்ளச் செய்தனர். **"அஞ்சாவது புள்ளய தெய்வம் கொடுத்தது தெய்வத்துக்கே அர்ப்பணம்"**[10] என அவன் ஒப்புக்கொள்வதும் புலனாகிறது.

அபசகுணம், நரபலி வரிசையில் தீட்டும் நம்மிடம் உள்ள மூடநம்பிக்கையாக பார்க்கப்படுகிறது. தன் மகன் பலியிடப்படுவதை தடுக்க முற்பட்டு தேவப்பாவின் மனைவி ஓடி வரும்போது ஊர்ப் பெரியவர்களும், ஐயரும் தீட்டாகிடும் என அஞ்சினர். **"ஐயோ அபச்சாரம் அபச்சாரம்... தீட்டாயிடப்போகுது அவள புடிச்சுக்குங்க..."**[11] என்று சொல்வதும் தேவப்பா இறைவன் மீது நம்பிக்கை கொண்டு பூசை செய்யத் தொடங்கிய பின்பு, **"சாமியறை முன்னால பொம்பள வந்தா மடி கெட்டுடும்... தீட்டாகி சாமி தண்டனை குடுத்துடுவாரு..."**[12] என்று சொல்வதும் அவர்களின் மூடத்தனமான நம்பிக்கையை புலப்படுத்துகிறது.

முன்னோர்களின் சொற்களாலோ, பயத்தினாலோ, தொடர் பழக்கத்தினாலோ பழைய மூடத்தனமான நம்பிக்கைகளை தேர் நாவலில் காட்டப்பட்டுள்ள மக்கள் ஆணித்தரமாக பின்பற்றுவது இதன் மூலம் அரியலாகிறது.

**தேரில் சடங்குகள்**

சடங்குகள் என்பவை நம் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை நிகழும் நிகழ்வுகளுக்கு பின்பற்றப்படும் ஒரு வரையறுக்கப்பட்ட செயல் முறையாகும். **"தனிப்பட்ட அச்சமாக இல்லாமல் ஒரு சமூக செயலாக காலம் காலமாக கடைபிடிக்கப்படும் வழக்கமாக தலைமுறை தலைமுறையாக கற்பிக்கப்பட்டு கடத்தப்பட்டு வருகிற நடைமுறையாக மக்களை கவ்வி இருக்கும் மூடநம்பிக்கைகள் நிறைய அப்படி கால தொடர்ச்சியோடு ஒரே மாதிரியாக படி எடுத்து பின்பற்றப்படும் நடைமுறைக்கு இன்னொரு பெயர் தான் சடங்கு என்பதாகும்."**[13] பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு, ஆன்மீகம் என பலவற்றிலும் சடங்குகள் உள்ளன. சில சடங்குகள் அளவை மீறி மூட நம்பிக்கைகளை வளர்ப்பதில் பங்காற்றுகின்றன.

தேர் நாவலில் தேவப்பா இறை நம்பிக்கை கொண்ட பிறகு தன் ரத்தத்தை சுத்தப்படுத்தும் ஒரு சடங்கை பின்பற்றுவதும் அதற்கென சங்கரதாத்தா சொல்படி கேட்டு பத்தியம் வைத்து ரத்தத்தை சுத்தப்படுத்தும் இந்த அரிய வகை சடங்கை மேற்கொள்வதும் தெரிகிறது.

**"சங்கர தாத்தா மருந்தால தேவப்பா தன் இரத்தத்துல இருக்கற அழுக்கயெல்லாம் அகற்றி சுத்தமாக்கி நாளைக்கி பயணம்...."**[14]

மேலும் பல கோயில்களுக்கு சென்று அங்குள்ள சடங்குகளையும் பரிகாரங்களையும் கற்றுக் கொள்கிறான்.

**"இரும்பு ஆணி அடிச்ச மிதிய போட்டுக்கிட்டு அந்த கல்லு மேல ஏறினா... காந்த கல்லு மேல உட்கார்ந்து தியானம்"**[15] என இப்படி பல சடங்குகளை செய்வதும் தெரிகிறது.

இவை அனைத்தையும் விட பெரிய சடங்குகளாக தேருக்கு நரபலி சடங்கும், ரத்த திலக சேவையும் பார்க்கப்படுகின்றன. தேதி, காலம் குறித்து தேவப்பாவின் மகனை நரபலிக்காக தயார் செய்வதையும் காணலாம்.

**"ராமநவமி அன்னைக்கு தரமனட்டி தேரு இழுக்குறாங்க"**[16]

**"தேவப்பாவின் ஐந்தாவது பிள்ளை சந்திரமாவ குளிப்பாட்டி சிவப்பு பட்டாடை அணிவிக்கிறார்கள்"**[17]

நரபலி நடந்து தேர் நகர்ந்ததும், கீழ்ச்சாதி ரத்தமே தேர் நகர காரணம் என்ற மூடத்தனத்தின் விளைவாக 'இரத்தத் திலக சேவை' என்னும் புதிய சடங்கை கொண்டு வந்தனர். அவர்கள், **"விட்டலர் சாமியின்**

**தேரோட்டத்துக்கு வந்து தேர்ச்சக்கரத்தில் தம் தலையை மோதி உடைத்துக் கொண்டு நெற்றியிலிருந்து வழிகிற பச்சை இரத்தத்தை வலது கை பெருவிரலால் தொட்டெடுத்து தேரின் கிழக்கு முகத்தில் திலகமிட வேண்டும்"**[18] என்ற மூடத்தனமான சடங்கைத் தொடங்கி பின்பற்றவும் செய்கின்றனர். இப்படி உடலை வருத்திக் கொள்வதும் மூடத்தனங்களை பின்பற்றுவதையும் தான் சடங்குகள் என்ற பெயரில் தரமனட்டி மக்கள் ஏற்படுத்தி வைத்திருப்பதை அறிய முடிகிறது.

**விழிப்புணர்வு**

நாம் நினைக்கும் செயல்கள் எல்லா நேரங்களிலும் சரியாக நடைபெறாது அதற்காக இறைவன் பெயரில் சடங்குகள், பரிகாரங்கள் செய்வது உடலை வருத்திக் கொள்வது பிற உயிர்களை பலியிடுவது யாவும் மூடத்தனமான செயல்களாகும்.

இறையே ஆயினும் அதன் அளவறிந்து செயல்படுவது நன்று. மூதாதையர் பயத்தினால் ஏற்படுத்தி வைத்த மூடப்பழக்கங்களை அறிவியலால் தெளிந்த நாம் இக்காலத்திலும் பின்பற்றுவது தவறாகும். இனிவரும் இளைய சமுதாயம் நம்முள் ஊறிக்கிடக்கும் தேவையற்ற நம்பிக்கைகள் மற்றும் சடங்குகளை களைய வேண்டும். மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் உரை நிகழ்த்துவது, இணைய வழியில் பரப்பரை செய்வது, காணொளிகள் பதிவிடுவது போன்றவற்றை செய்ய வேண்டும். அடுத்த தலைமுறையினர் மூடநம்பிக்கைகளை பின்பற்றா தவர்களாக இருக்க வேண்டும். எனவே தற்போதிலிருந்தே மூடநம்பிக்கைகளை எதிர்க்கும் முயற்சியில் ஈடுபடுவது சிறந்த வழிமுறையாகும்.

**முடிவுரை**

தேர் நாவலின் வழியில் அமைக்கப்பட்டிருக்கும் காட்சிகள், பாத்திரங்கள், சூழல் யாவும் அதிகார வர்க்கத்தினர் வலிமை குன்றியவர்களை அடக்கும் தொனியிலேயே உள்ளது. அடிமைப் படுத்துவது தெரியாமல் இருக்க மக்கள் பொதுவாக நம்பக் கூடிய இறை நம்பிக்கையில் மூழ்கியிருக்கும் மூடநம்பிக்கைகளை ஊக்குவிக்கும் வண்ணம் அமைகிறது. அதனை ஏற்று பழக்கப்பட்ட மக்களும் கேள்வி எழுப்பத் தயங்கியே வாழ்கின்றனர். எல்லாவற்றிலும் முதன்மையாக இறைவனை நினைக்கிறோம். ஆனால் இறையின் பெயரில் மூடத்தனத்தை புகுத்துவதும், அதனை மக்கள் பின்பற்றுவதும் தவறானது. அறிவு முதிர்ச்சி வந்த பின்னரும் மூடநம்பிக்கைகளை பின்பற்றி என்ன பயன். எனவே தெளிந்த அறிவினால் அணுகுதல் சிறந்தது.

தேர் நாவலில் கூறப்பட்டுள்ள மக்களின் தன்மையும் வாழ்க்கை முறையும் ஒரு குறிப்பிட்ட கால சூழலில் வாழ்ந்தவர்களை காட்டுகிறது. இன்றளவும் மூடநம்பிக்கைகளையும் தேவையற்ற சடங்குகளையும் நான் பின்பற்றிக் கொண்டிருந் தால் சரியான விழிப்புணர்வின்றி ஏதேனும் ஒரு ஆதிக்க சக்தியால் அடிமைப்பட்டுக் கொண்டே தான் இருப்போம். எனவே, இவற்றையெல்லாம் தவிர்த்து மனிதநலம் பேணுதல் சிறப்பாகும்.

**சான்றெண் விளக்கம்**

1. மூடநம்பிக்கையிலிருந்து விடுதலை, ப. 01.
2. மேலது., ப. 121.
3. தெய்வங்களும் சமூக மரபுகளும், ப. 04.
4. தேர், ப. 27.
5. மேலது., ப. 33.
6. மேலது., ப 38.
7. மேலது., ப 39.
8. மூடநம்பிக்கை பற்றிய கட்டுரை, உண்மை (இதழ்), ப. 01.
9. தேர், ப. 42.
10. மேலது., ப. 53.
11. மேலது., ப. 58.
12. மேலது., ப. 66.
13. நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும் - 2 மின்னம்பலம் (இதழ்), ப. 02.
14. தேர், ப. 76.
15. மேலது., ப. 82.
16. மேலது., ப. 56.
17. மேலது., ப. 56.
18. மேலது., ப. 60.

**துணைநூற் பட்டியல்**

1. பாவண்ணன், **தேர்,** சாகித்ய அகாதெமி பதிப்பகம், புது தில்லி-110 001, முதல் பதிப்பு-2011.
2. அருணன், **மூடநம்பிக்கையிலிருந்து விடுதலை,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிமிடெட், சென்னை-600 098, நான்காம் பதிப்பு-டிசம்பர், 2006.
3. பரமசிவன். தொ., **தெய்வங்களும் சமூக மரபுகளும்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை-600 098, மூன்றாம் பதிப்பு-2006
4. மஞ்சை வசந்தன், **மூடநம்பிக்கை இருளகற்ற பகுத்தறிவு வெளிச்சம் பாய்ச்சுவோம் (கட்டுரை),** உண்மை (இதழ்), ஆகஸ்ட் 16, 2023.
5. குமரேசன். அ, **நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும்,** சிறப்பு கட்டுரை, மின்னம்பலம், 2017